*23*

# எருசலேமில் சபை ஸ்தாபிக்கப்படுதலும் வளர்ச்சியும், கி.பி. 30–35[1]

*நடபடிகள் 1-7*

## I. *சபை ஸ்தாபிக்கப்படுதல்.*

### *(அப். 1, 2.)*

***1. சபையின் உயிர்க்கரு; பத்து நாட்கள் காத்திருத்தல்.***—*(இயேசுவின்) உயிர்த்தெழுதலுக்குப் பின் எருசலேமில் தங்கியிருந்த அல்லது எஞ்சியிருந்த சீஷர்களின் எண்ணிக்கை நூற்று இருபதாக இருந்தது. கலிலேயாவில் இருந்தவர்கள் உட்பட அவர்கள் குறைந்தது ஐந்நூறு பேர்களாயிருந்தனர் (1 கொரி. 15:6). அந்த நூற்று இருபது பேர், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆவியானவரை அன்றாடம் எதிர்பார்த்துக் காத்திருக்கையில் ஜெபத்தில் தரித்திருந்தார்கள். காத்திருந்த நாட்களின் போது, பேதுருவின் ஆலோசனை யின் பேரில், அப்போஸ்தலத்துவத்தில் யூதாஸின் தற்கொலையால் ஏற்பட்டிருந்த காலியிடம் மத்தியாவைத் தேர்ந்து கொண்டதன் மூலம் நிரப்பப்பட்டது; கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பற்றிச் சாட்சி கொடுக்கக் கூடியவராவதற்கு அவரைப் பற்றித் தனிப்பட்ட அறிவுடனிருத்தல் என்பது அப்போஸ்தலராயிருப்பதற்குரிய அத்தியாவசியமான தகுதியாய் இருந்தது (அப். 1:21, 22; 1 கொரி. 9:1).*

***2. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்.***—*அ. காலமும் உடன் நிகழ்வுகளும்.*—*பஸ்காவன்று கிறிஸ்து பாடுபட்டிருந்தார். அதன் பின் ஐம்பது நாட்கள் கழித்து, மாபெரும் பண்டிகைகளில் இரண்டாவதான பெந்தெகொஸ்தேயன்று ஆவியானவர் வந்தார். அவர் கண்ணுக்கும் காதுக்கும் உணர்ந்தறிதல் தரும் உடன் நிகழ்வுகளுடன் வந்தார்—காற்று வீசுதல் இல்லாதிருப்பினும் பலத்த காற்று அடிக்கிறது போல் ஒரு முழக்கம் உண்டாயிற்று; ஜுவாலை இல்லாவிடினும் அக்கினிமயமான நாவுகள் தோன்றின.*

*ஆ. சீஷர்கள்மீது அதன் செயல்விளைவு.*—*பன்னிரு சீஷர்கள் மீதான அதன் செயல்விளைவானது உடனடியானதாக, வல்லமைமிக்கதாக, மாற்றுருக் கொடுப்பதாக இருந்தது: ‘‘அவர்களெல்லாரும் பரிசுத்த*

ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்."[2] ஆனால் இயற்கைக்கு மேலான உட்கண்ணோட்டமும் வல்லமையும் மட்டுமே அங்கு ஏற்பட்ட செயல்விளைவுகளாய் இருந்ததில்லை. அவர்கள் ஒழுக்க ரீதியாகவும் மாற்றியமைக்கப்பட்டனர். அது முதற் கொண்டு இராஜ்யத்தைப் பற்றிய உலகப் பிரகாரமான கருத்துக்கள் இருப்பதில்லை, அதில் (இராஜ்யத்தில்) முதன்மையான இடங்களைப் பற்றிய சண்டைகளும் இருப்பதில்லை.

*இ. இதன் ஆதாரப்பூர்வமான மதிப்பு.*—இயேசு தாம் பிதாவினிடத்தில் திரும்பும் நிகழ்வுடன், தேற்றரவாளனின் வருகையைத் தொடர்பு படுத்தி யிருந்தார் (யோவா. 15:26, 27; 16:7; இ.வ. 7:39; அப். 2:33). பெந்தெ கொஸ்தே (நாளின் நிகழ்ச்சி) என்பது பூமி தனது கர்த்தரை மறுதலித் தமைக்குப் பரலோகத்தின் பதிலாய் இருந்தது; முட்களால் ஆன கீரிடத் திற்குப் பதில் மகிமையின் கிரீடம் (அவ்விடத்தில்) மாற்றி வைக்கப்பட்டது என்பதற்கான வெளிப்படையான அறிவிப்பாய் இருந்தது; இது (யூத) நாட்டவரின் பாவத்திற்கும் இயேசுவின் மேசியாத்துவத்திற்கும் உச்ச கட்டமான நிரூபணமாய் இருந்தது.

*ஈ. திரளான கூட்டத்தாரின் மீதான செயல்விளைவு.*—அப்போஸ்தலர் களைச் சுற்றி உடனடியாகக் கூடிய ஆயிரக்கணக்கானவர்களும் வியப்படை யும் வண்ணம், ஆவியானவரின் ஞானஸ்நானம் உறுதிப்படுத்தும், மாற்றும் வல்லமையுடன் வந்தது; அது மறைமுகமாய் இருந்த போதிலும் செயல் விளைவுடன், பேதுருவின் உதடுகளிலிருந்து உரைக்கப்பட்ட சுவிசேஷத் தின் மூலமாக வந்தது.

***3. பேதுருவின் பிரசங்கம்; விளைவுகள்.***—பேதுரு உரையாற்றுபவராய் இருக்கின்றார்; அவரது உரையைக் கேட்ட யூதர்கள் பல்வேறு நாடுகளில் பிறந்தவர்களாய் இருந்தனர். தவறான எண்ணத்தை நீக்கிப் போடப் பொருத்தமான ஒரு அறிமுக உரைக்குப் பிறகு, அவர் இயேசுவே கிறிஸ்து என்பதை மெய்ப்பிக்கச் செல்லுகின்றார், (இதை அவர் பின்வரும் நான்கு கருத்துக்களின் மூலம் மெய்ப்பித்தார்:) (1) நன்கறியப்பட்ட அவரது ஊழியங்களினால்; (2) பொல்லாத மனிதர்களால் அறியப்படாமலேயே நிறைவேற்றப்பட்ட தேவனுடைய திட்டமான அவரது மரணத்தினால்; (3) தீர்க்கதரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டு அப்போஸ்தலர்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த அவருடைய உயிர்த்தெழுதலினால்; (4) தீர்க்க தரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டு, பெந்தெகொஸ்தே நாளன்று நிகழ்ந்த அற்புதத்தினால் உறுதிப்படுத்தபட்டிருந்த செயலான பிதாவின் வலது புறத்தில் அவர் உயர்த்தப்பட்டார் என்ற நிகழ்ச்சியினால்.

இதன் விளைவுகள் பின்வருமாறு: (1) குத்தப்பட்ட ஒரு உறுதிப்பாடு; "அவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி"[3]; (2) தீர்க்கமான ஒரு கேள்வி: "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?"[4] (3) தெளிவான ஒரு பதில்: "மனந்திரும்பி—ஒவ்வொருவரும்—பாவமன்னிப்புக்கென்று—இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்—அப்போது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்"[5]; (4) உடனடியான

கீழ்ப்படிதல்; ''அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்; அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்''[6]; (5) "அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும்" உறுதியாய்த் தரித்திருத்தல்.[7]

பெந்தெகொஸ்தே நாளான்று "சபையின் பிறந்த நாள்" என்று நன்கு அழைக்கப்படலாம்.

## II. எருசலேமில் சபையின் வளர்ச்சி.
## (அப். 3-7.)

***1. யூதர்களின் முதலாவது உபத்திரவம்.***—பெந்தெகொஸ்தேக்குப் பிறகு மிக விரைவிலேயே, தேவாலய வாசலருகே பேதுருவும் யோவானும் ஒரு சப்பாணியைக் குணமாக்கினர். அங்கே கூடி வந்த திரளான கூட்டத்தார், பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு செய்த ஊழியத்தின் பின் தொடர்ச் சிக்கு ஒரு வாய்ப்பைப் பேதுருவுக்கு அளித்தனர். அவரது உரையானது சதுசேயர்களால் இடைமறிக்கப்பட்டது, அவர்களைப் பொறுத்தமட்டில் உயிர்த்தெழுதல் என்பது விசேஷித்த வகையில் வெறுக்கத்தக்க கருத்தா யிருந்தது; இரு அப்போஸ்தலர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர். இருப்பினும் பேதுருவின் உரையானது சீஷர்களின் எண்ணிக்கையை ஐயாயிரமாக உயர்த்திற்று. அடுத்த நாளில் பேதுருவும் யோவானும் ஆலோசனை சங்கத்தார் முன்னிலையில் கொண்டு வரப்பட்டனர், அந்தச் சங்கத்தில் சதுசேயரே பெரும்பான்மையானவர்களாய் இருந்தனர், அவர்கள் (சீஷர்கள்) எந்த அதிகாரத்தின் பேரில் அந்த அற்புதத்தைச் செய்தனர் என்று இவர்கள் (சங்கத்தார்) கேட்டனர். அவர்கள் அது இயேசு வின் வல்லமையினால் நடைபெற்றதென்று தைரியத்துடன் உரிமையாக்கி, தங்களின் நியாயாதிபதிகளிடத்தில் அவருடைய நாமமேயல்லாது வேறொரு நாமத்திலே இரட்சிப்பு இல்லை என்று தைரியமாய் அறிவித்த னர். அதிகாரிகள் அற்புதத்தை மறுக்க முடியாது இருந்தது, எனவே அப்போஸ்தலர்களைப் பயமுறுத்தியதுடன் அவர்கள் திருப்தியடைந்து அவர்களைச் செல்ல அனுமதித்தனர்.

***2. (சீஷருக்குள்) இருந்த அபாயங்கள்; அனனியாவும் சப்பீராளும்.***— கிறிஸ்தவப் பரிவிரக்கத்திற்கான எடுத்துக்காட்டு ஒன்றை எருசலேமில் இருந்த சபை வழங்குகின்றது (அப். 2:44, 45; 4:34-37). அது கட்டாய மானதாக இருந்ததில்லை (அப். 5:3, 4), ஆனால் முற்றிலும் சுயேச்சையாக ஏற்பட்டதாயிருந்தது. அது உலகளாவியதுமல்ல நிலையானதுமல்ல; இது ஆவியில் அப்போஸ்தலிக்க சபை முழுவதையும் பண்புபடுத்தினாலும் வடிவமைப்பில் இது எருசலேம் நகரின் சபைக்கு மட்டுமே உரியதா யிருந்தது. அனனியாவும் சப்பீராளும் தங்கள் உடமைகளை விற்ற பணத்தில் ஒரு பகுதியை அப்போஸ்தலர்களிடத்தில் கொடுத்தனர், ஆனால் அதை தீய இயல்பான நோக்கத்துடன் செய்தனர். அவர்களின் (இச்செயலுக்கான) தூண்டுதல் பேதுருவினால் வெளிப்படுத்தப்பட்டதும், அவருடைய பாதங்

களில் அவர்கள் உடனடியாக வீழ்ந்து மரணம் அடைந்ததும் சபையார் யாவரையும் பயபக்தியினால் நிரப்பியது. இது மார்க்க விஷயங்களில் உண்மையற்ற தன்மைக்கெதிரான நினைவுச் சின்னமாக புதிய சமூகத்தின் நுழைவாயிலிலேயே நிற்பதாக உள்ளது. பன்னிருவரில் முதலாவது மரணமடைந்தவர் காட்டிக் கொடுத்தவராய் இருந்தார், மற்றும் அவரது மரணம் தற்கொலையால் நிகழ்ந்தது என்பதும், அப்போஸ்தலிக்க சபையில் முதலாவது மரணம் அடைந்தவர்கள் மாய்மாலக்காரர்களாயும் பொய்யர் களாயும் இருந்தார்கள் என்பதும் இவ்விடத்தில் கவனிக்கத் தகுந்த உண்மையாக உள்ளது.

**3. யூதர்களின் இரண்டாவது உபத்திரவம்.**—நீதியான எல்லா ஒழுங்கு நடவடிக்கையையும் போலவே, அனனியா சப்பீராள் ஆகியோருக்குக் கிடைத்த நியாயத்தீர்ப்பின் செயல்விளைவானது சுவிசேஷத்தின் வல்லமையை அதிகப்படுத்திற்று. எச்சரிக்கையும் கோபமும் அடைந்த ஆலோசனை சங்கத்தார், எல்லா அப்போஸ்தலர்களையும் சிறையில் தள்ளினர். தேவன் அவர்களுக்காக இன்னும் ஊழியப் பணிகளைக் கொண்டிருந்தார், மற்றும் அவருடைய தூதன் சிறைக் கதவைத் திறந்து விட்டு, அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி தேவாலயத்திற்கு அவர்களை அழைத்து வந்து விட்டான். அவர்களின் இரகசியமான தப்பித்தலால் கலக்கமுற்ற அதிகாரிகள் அவர்களை ஆலோசனைச் சங்கத்தின் முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தினர். அப்போஸ்தலர்கள், மனிதர் களுக்கல்ல ஆனால் தேவனுக்கே தாங்கள் கீழ்ப்படிவதான தங்கள் தீர்மானத்தை அறிவித்தனர்; மற்றும் ஆலோசனை சங்கத்தார் கமாலியேலின் ஆலோசனையின் பேரிலேயே வன்முறையான நடவடிக்கைகளைக் கைவிட்டனர்: "இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம்; தேவனால் உண்டாயிருந்த தேயானால், அதை ஒழித்து விட உங்களால் கூடாது."[8] கமாலியேல் ஒரு பரிசேயராக, பவுலின் ஆசிரியராக (அப். 22:3) இருந்தார். இந்த தொடக்க காலத் துன்புறத்துதல்களில் பரிசேயர்கள் துடிப்புடன் செயல்பட்டிருக்க வில்லை என்பதாகக் காணப்படுகின்றது.

**4. பிரயாசத்தில் முதல் பிரிவினை.**—சபையானது விரைவிலேயே பல இனத்தவரும் சேர்ந்துள்ள இடமாயிற்று. பெந்தெகொஸ்தே நாளன்று பேதுருவின் உரையைக் கேட்ட மாறுபட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் (அப். 2:8-11) விரைவிலேயே சபையில் அதன் எதிரெதிர் பாகங்களாக ஆயினர். பலஸ்தீனத்திற்குப் புறம்பே யூத இரத்தத்தில் பிறந்தவர்கள் ஹெல்லெனிஸ்டுகள் அல்லது "கிரேக்க(யூத)ர்கள்" என்று அழைக்கப் பட்டார்கள். இவர்கள் நடபடிகளில் அடிக்கடி, "எபிரெயர்கள்" அல்லது பலஸ்தீனிய யூதர்களுக்கு நேரெதிராகத் தோன்றுகின்றனர். இவ்விரு வகுப்பாருக்குமிடையே ஏற்பட்ட பொறாமை/விரோதம், பிரயாசத்தின் முதல் பிரிவினைக்கான காரணமாயிற்று. சபையின் நிறுவன அமைப்பு படிப் படியான வளர்ச்சியாய் இருந்தது. முதலில் அப்போஸ்தலர்கள் எல்லாப் பணி நிலைகளையும் நிரப்பினார்கள். அன்றாடக விசாரணையிலிருந்து கிளம்பிய விரோதத்தை அமைதிப்படுத்துவதற்காக, அப்போஸ்தலர்களின்

பரிந்துரையின் பேரில் சபையானது இந்தப் பணியைக் கவனிப்பதற்காக ஏழு ஆண்களைத் தேர்ந்தெடுத்தது, இவர்கள் யாவரும் கிரேக்கப் பெயருடைய வர்களாயிருந்தனர். இவ்வழி முறையின் வாயிலாக உதவிக்காரரின் பணி நிலை உதித்தெழும்பிற்று. இவ்விதமாக, அப்போஸ்தலர்கள் ஜெபத்திற்கும் வசனத்தைப் போதிக்கும் ஊழியத்திற்கும் தங்களை முழுமையாக ஒப்புக் கொடுக்கக் கூடியவர்களாயினர். ஆசாரியர்கள் பலரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தனர் என்ற சுவிசேஷத்தின் இன்னும் அதிகமான மாபெரும் வெற்றியில் நல்ல செயல் விளைவு காணப்பட்டது.

***5. கிறிஸ்தவ இரத்த சாட்சியாக மரித்த முதலாமவர்*** *(6:8-7:60).* —சபையானது தான் அறிந்திருந்ததைக் காட்டிலும் சிறப்பான பண்புடைய வர்களைத் தேர்ந்தெடுத்திருந்தது. ஏழு உதவிக்காரர்களில் ஒருவரான ஸ்தேவான், கிரேக்கரானவர்களின் விதவைகளுக்கு உணவளிப்பதில் தொடங்கினார்; மிக விரைவிலேயே அவர் கிரேக்கரானர்களின் ஜெப ஆலயங்களில் ஜீவ அப்பத்தைப் பிட்டளிக்கத் தொடங்கினார்.

இந்த வேளை வரைக்கும் சீஷர்கள் மற்றும் யூதர்கள் ஆகியோராலும் கூட, அவர்கள் (சீஷர்கள்) யூதர்களின் தனி வகைப்பட்டதொரு பிரிவு என்பதாகவே கருதப்பட்டனர். புறஜாதியாரை உள்ளடக்கும்படியான பரந்த ஊழியத்திற்கான சிந்தனை எதுவும் உற்சாகப்படுத்தப்படட்டதில்லை. ஆனால் ஸ்தேவான் யூதத்துவத்தினை முடித்து வைக்கும் பணிகளைக் கண்ணோக்கத் தொடங்கி விட்டார் என்பது தெளிவு. இது யூதர்களின் அனைவரையும் ஒரு மென்மையான பகுதியில் தொட்டது. கிரேக்கரான வர்கள் விவாதத்தில் தோல்வியுற்று, துன்புறுத்துதலை மீண்டும் எழுப்பி னார்கள். இப்பொழுது பரிசேயர்கள் செயல்படுபவர்களாகி விட்டார்கள். இரண்டாவது உபத்திரவத்தில் பரிசேயராகிய கமாலியேல் பேதுருவைப் பாதுகாப்பவராகக் காணப்பட்டார்; மூன்றாவது உபத்திரவத்தில், அவரது மாணவரான பவுல் ஸ்தேவானை உபத்திரவிப்பவராகக் காணப்பட்டார். இவர் (ஸ்தேவான்) எருசலேமில் இருந்த சபையில் மிகவும் வளர்நிலை யிலிருந்த ஆவியை உடையவராயிருந்தார், இவர் முதல் கிறிஸ்தவ ரத்த சாட்சியாக மரணித்து வீழ்ந்தார். தமது எஜமானரின் ஆவியைக் கொண்ட வராய் இவர் பின்வரும் ஜெபத்துடன் மரிக்கின்றார்: “ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்.”[9] சபையானது ஸ்தேவானை இழந்தது, ஆனால் விரைவிலேயே பவுலை ஆதாயப்படுத்திக் கொண்டது; நாம் புனிதர் அகஸ்டினோடு சேர்ந்து பின்வருமாறு கூறலாம்,—

*Si Stephanus non orasset,*
*Ecclesia Paulum non haberet.*

ஸ்தேவன் ஜெபியாதிருந்திருந்தால்
சபை பவுலைப் பெற்றிருக்காது.

குறிப்புகள்

[1]*சபை ஸ்தாபிக்கப்பட்டதற்கு மாற்றுத் தேதியாக கி.பி. 33 உள்ளது.* [2]*அப். 2:4.* [3]*அப். 2:37.* [4]*அப். 2:37.* [5]*அப். 2:38.* [6]*அப். 2:41.* [7]*அப். 2:42.* [8]*அப். 5:38, 39.* [9]*அப். 7:60.*